## செப்டம்பர் - 07 - வியாழன்

### “அஞ்சாதே இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்” லூக் 5:10

**முதல் வாசகம் : கொலோசேயர்1 : 9 – 14**

சகோதல சகோதரிகளே நாங்கள் இச்செய்தியைக் கேள்விப்பட்ட நாள்முதல் உங்களுக்காகத் தவறாமல் இறைவனிடம் வேண்டி இவ்வாறு அவரிடம் கேட்டுக்கொள்கிறோம் நீங்கள் முழு ஞானத்தையும் ஆவிக்குரிய அறிவுத்திறனையும் பெற்றுக் கடவுளின் திருவுளத்தைப்பற்றிய அறிவை நிறைவாக அடையவேண்டும். நீங்கள் அனைத்திலும் ஆண்டவருக்கு உகந்தவற்றைச் செய்து அவருக்கு ஏற்புடையவர்களாய் நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் பயன்தரும் நற்செயல்கள் அனைத்தும் செய்து கடவுளைப்பற்றிய அறிவில் வளரவேண்டும். நீங்கள் முழு மனஉறுதியோடும் பொறுமையோடும் இருக்குமாறு தம் மாட்சிமிகு ஆற்றலுக்கேற்பத் தம் வல்லமையால் அவர் உங்களுக்கு வலுவூட்ட வேண்டும். மகிழ்ச்சியோடு, தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். அவர் இறைமக்களுக்கான ஒளிமயமான உரிமைப்பேற்றில் பங்குபெற உங்களைத் தகுதியுள்ளவர் களாக்கியுள்ளார். அவரே இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை விடுவித்துத் தம் அன்பார்ந்த மகனின் ஆட்சிக்குட்படுத்தினார். அம்மகனால்தான் நாம் பாவமன்னிப்பாகிய மீட்பைப் பெறுகிறோம்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மீட்பை அறிவித்தார்

**நற்செய்தி : லூக்கா 5 : 1 – 11**

அக்காலத்தில் ஒரு நாள் இயேசு கெனசரேத்து ஏரிக்கரையில் நின்றுகொண்டிருந்தார். திரளான மக்கள் இறைவார்த்தையைக் கேட்பதற்கு அவரை நெருக்கிக் கொண்டிருந்தனர்.அப்போது ஏரிக்கரையில் இரண்டு படகுகள் நிற்கக் கண்டார். மீனவர் படகைவிட்டு இறங்கி, வலைகளை அலசிக் கொண்டிருந்தனர். அப்படகுகளுள் ஒன்று சீமோனுடையது. அதில் இயேசு ஏறினார். அவர் கரையிலிருந்து அதைச் சற்றே தள்ளும்படி அவரிடம் கேட்டுக் கொண்டு படகில் அமர்ந்தவாறே மக்கள் கூட்டத்துக்குக் கற்பித்தார். அவர் பேசி முடித்தபின்பு சீமோனை நோக்கி, ”ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டு போய், மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்” என்றார்.சீமோன் மறுமொழியாக, ”ஐயா, இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை ஆயினும் உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்” என்றார். அப்படியே அவர்கள் செய்து பெருந்திரளான மீன்களைப் பிடித்தார்கள். வலைகள் கிழியத் தொடங்கவே,மற்றப் படகிலிருந்த தங்கள் கூட்டாளிகளுக்குச் சைகைகாட்டித் துணைக்கு வருமாறு அழைத்தார்கள். அவர்களும் வந்து இரு படகுகளையும் மீன்களால் நிரப்பினார்கள். அவை மூழ்கும் நிலையிலிருந்தன.இதைக் கண்ட சீமோன் பேதுரு, இயேசுவின் கால்களில் விழுந்து, ”ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும்” என்றார்அவரும் அவரோடு இருந்த அனைவரும் மிகுதியான மீன்பாட்டைக் கண்டு திகைப்புற்றனர். சீமோனுடைய பங்காளிகளான செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் அவ்வாறே திகைத்தார்கள். இயேசு சீமோனை நோக்கி, ”அஞ்சாதே இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்” என்று சொன்னார்.அவர்கள் தங்கள் படகுகளைக் கரையில் கொண்டு போய்ச் சேர்த்தபின் அனைத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள்.

**தியானம் :** இறை அரசுப் பணியில் பேதுருவின் பங்கு மகத்தானது. பேதுரு பயந்த சுபாவம் உள்ளவராக இருந்தார். யேசு தமது பாடுகளப்பற்றி சொல்லியபோது அதை ஏற்க அவர் தயங்கினார். இதனால் யேசு போ அப்பாலே சாத்தானே என்று அவரை கடிந்து கொண்டார் (மத் 16: 21-23). மரணத்திற்கு பயந்து அவரை அறியேன் என்று மும்முறை மறுதலித்தார். கடலில் புயல் காற்று வீசியபோது பயந்து யேசுவை எழுப்பி நாம் மடியப்போகிறோம் காப்பாற்றும் என்று கதறினார். இப்படிப்பட்ட பலவீனமான பேதுரு திருச்சபையின் பாறையாக எவ்வாறு மாற்றம் பெற்றார்? அதுதான் இறை அழைத்தல். நாமும் இறை பணிக்கு அழைக்கப் பட்டுள்ளோம். மதம் பரப்புவதும் மக்களை மதமாற்றத்திற்கு இட்டுச்செல்வதும் பணி அல்ல. தேவையில் உதவுவதும், நோயாளர்களை சந்தித்து ஆறுதல் வார்த்தை கூறுவதும், அவர்களுக்காக செபிப்பதும் நமது பணிகளே. இவற்றை செய்ய நாம் தயாரா? நேரம் இல்லை என்பதுதான் நமது பதிலாக இருக்கின்றது. எனவே நாமும் மனிதர்களை அன்பால், செபத்தால், மன்னிப்பால், தாழ்ச்சியால் பிடிப்போம், அப்போது இறை அரசு நம் மத்தியில் வளரும்.